**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை**
**முன்னிலை : திரு. வ. இராமலிங்கம், பி.எஸ்.சி., பி.எல்.,**
**சார்பு நீதிபதி, அருப்புக்கோட்டை**
**2023 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 6 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**வ.வி.எண்.1/2022 இன் எச்.எம்.ஓ.பி.எண்.173/2017**

இராதாபிரியதர்ஷினி ... மனுதாரர்/எதிர்மனுதாரர்

/எதிர்/

ஸ்ரீதர்பப்பி ... எதிர்மனுதாரர்/மனுதாரர்

இம்மனுவானது இந்நீதின்றம் முன்பாக இறுதியான விசாரணைக்காக 15.12.2022 அன்று வந்தபோது மனுதாரர்தரப்பில் வழக்கறிஞர் திரு.டி.பெருமாள்சாமி அவர்கள் ஆஜரான நிலையிலும் எதிர்மனுதாரர்தரப்பில் வழக்கறிஞர் திரு.நவநீதகிருஷ்ணன் அவர்கள் ஆஜரான நிலையிலும் இருதரப்பும் கேட்கப்பட்டும் ஆவணங்கள் பரிசீலிக்கப் பட்டும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

1. எதிர்மனுதாரருக்கு எதிராக இந்நீதிமன்றத்தில் இடை மனு எண்.39/2018 ல் கடந்த 08.03.2019 ம் தேதிய உத்தரவு பிரகாரம் மனுதாரருக்கு எதிர்மனுதாரர் தரப்பில் இடைக்கால ஜீவனாம்ச தொகையை செலுத்தத் தவறிய காரணத்தால் எதிர்மனுதாரர்/மனுதாரர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அசல் மணமுறிவு மனுவான எச்.எம்.ஓ.பி.எண்.173/2017 மனுவை நிராகரித்து உத்தரவிடக்கோரி இந்து திருமணச் சட்டம் பிரிவு 23(1)(எ) மற்றும் பிரிவு 151 சிபிசி படி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுவின் சுருக்கம்:–

மனுதாரர் அசல் எச்.எம்.ஓ.பி. மனுவின் எதிர்மனுதாரர். மனுதாரர் எதிர்மனுதாரருக்கு எதிராக இடைக்கால வாழ்க்கை பொருளுதவி கோரும் வழக்கினை தாக்கல் செய்து மேற்படி மனு இ.ம.எண்.39/18 என எண்ணிடப்பட்டு, இருதரப்பு விசாரணைக்குப் பின்னர் எதிர்மனதாரர் மனுதாரருக்கு மாதம் ரூ 15,000/– ஜீவனாம்சம் மனுத்தாக்கல் செய்த தேதியிலிருந்து கொடுக்க வேண்டும் என்று 08.03.2019 அன்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவினை எதிர்த்து எதிர்மனுதாரர்

சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் சி.எம்.பி.(எம்டி)எண்.5232/2019 தாக்கல் செய்து அம்மனுவில் மாதம் ரூ 10,000/– ஜீவனாம்சம் வழங்க உத்தரவிடப்பட்ட நிலையில், எதிர்மனுதாரர் மேற்படி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை சி.எம்.பி.(எம்.டி)எண்.5232/2019 மனுவினை வலியுறுத்தவில்லை என்று திரும்பப் பெற்றுக் கொண்ட நிலையில் மேற்படி மனு 20.06.2022ம் தேதி தள்ளுபடியாகியுள்ளது. அதன்பின்பு எதிர்மனுதாரர் மனுதாரருக்கு எந்த ஒரு இடைக்கால ஜீவனாம்சத் தொகையும் வழங்கவில்லை. எதிர்மனுதாரருக்கு மாதம் ரூ 1,00,000/–வரை வருமானமும் சொந்தமாக வீடுகளும் கையில் ரூ 1,00,00,000/– வரை ரொக்கப் பணமும் வைத்துக் கொண்டு சமூகத்தில் செல்வந்தராக வாழ்ந்து வருகிறார். எதிர்மனுதாரர் மனுதாரருக்கு 22.07.2022 வரை வழங்க வேண்டிய இடைக்கால ஜீவனாம்ச நிலுவைத் தொகையானது ரு் 5,30,000/– ஆகும். ஆனால் மேற்படி இடைக்கால ஜீவனாம்சத் தொகையை எதிர்மனுதாரர் மனுதாரருக்கு வழங்காமல் மனுதாரரை பல வழிகளில் துன்புறுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் காலம் கடத்தி வருகிறார். மனுதாரர் தனது வயதான பெற்றோர் பராமரிப்பில் மிகுந்த கஷ்டமான சூழ்நிலையில் துன்பத்துடன் வாழ்ந்து வருகிறார். எதிர்மனுதாரரை ஜீவனாம்ச நிலுவைத் தொகையை உடனே செலுத்த நீதிமன்றம் உத்தரவிட்டும் எதிர்மனுதாரர் ஜீவனாம்சத் தொகையை இதுவரை செலுத்தவில்லை. எனவே எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த அசல் மணமுறிவு மனுவை நிராகரித்து உத்தரவிடவேண்டும்.

3. <u>எதிர்மனுதாரர் தரப்பு மறுப்புரையின் சுருக்கம்:–</u>

(அ) மனுவில் கூறியுள்ள சங்கதிகளில் ஒப்புக் கொள்ளப்படும் சங்கதிகள் தவிர இதர சங்கதிகள் மறுக்கப்படுகின்றன. திருமணம் ஆனது முதல் எதிர்மனுதாரர் மற்றும் அவரது குடும்பத்தினர் மனுதாரரை நல்லமுறையில் கவனித்தபோதிலும் எந்தவித காரணமும் இன்றி தொடர்ந்து சிறுசிறு சண்டையிட்டு இறுதியில் கடந்த 07.07.2014 முதல் எதிர்மனுதாரரை விட்டு பிரிந்து சென்று வாழ்ந்து வருகிறார். மனுதாரரை எதிர்மனுதாரர் அழைத்து வருவதற்கு எடுத்த பல்வேறு கட்ட முயற்சிகளும் தோல்வியுற்று செங்கல்பட்டு நீதிமன்றத்தில் சேர்ந்து வாழ தொடுத்த வழக்கில் உத்தரவு பெற்ற நிலையிலும் மனுதாரர் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ வரவில்லை. மேற்படி உத்தரவினை நிறைவேற்றும்படி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதை பெற்றுக்

கொண்டு நீதிமன்ற உத்தரவை மதிக்காமலும் எதிர்மனுதாரர் மற்றும் அவரது குடும்பத்தினரை பழிவாங்கும் காழ்ப்புணர்ச்சியுடனும் பல்வேறு விதங்களில் பொய்யான காரணங்களைக் கூறி காவல் நிலையத்திலும், சமூக நலத்துறையிலும் முதலமைச்சர் தனிப்பிரிவிற்கும் பொய்யான புகாரை தாக்கல் செய்தும், அதனால் ஏற்பட்ட வழக்குகளில் மாண்புமிகு உயர்நீதிமன்ற பிணை உத்தரவினை நிறைவேற்றும் பொருட்டு சுமார் 3 மாத காலம் எதிர்மனுதாரர் அவர்களின் குடும்பத்தினர் அனைவரும் அவர்களின் இருப்பிடத்தையும் பணியையும் விட்டுவிட்டு நெடுந்தொலையில் உள்ள அருப்புக்கோட்டையில் தங்கி நிறைவேற்றினர். ,இந்த காலகட்டத்தில் தன்னுடைய அலுவலக பணியை சரிவ செய்ய முடியாத காரணத்தினால் எதிர்மனுதாரர் பணியிலிருந்து நீக்கப்பட்டார். மேலும் மனுதாரர் கல்லூரியில் விரிவுரையாளராக வேலை பார்த்து மாத வருமானம் ஈட்டி வருவதை மறைத்து பொய்யாக இம்மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

(ஆ) மேலும் மாண்புமிகு உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் தாக்கல் செய்த வழக்கை எதிர்மனுதாரர் வாபஸ் பெறுவதற்கு முன்பே எதிர்மனுதாரரால் ரூ 1,80,000/– வரை நீதிமன்ற உத்தரவினை எந்தவித இடையூறும் இன்றி நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும் நீதிமன்ற உத்தரவின்படி இ.ம.எண்.39/2018 மனுத் தாக்கல் செய்த நாளிலிருந்து உத்தரவு தேதிவரை ரூ 2,10,000/– கணக்கிடப்பட்டு, தற்பொழுதுவரை மொத்தம் ரூ 1,80,000/– செலுத்தப்பட்டு நிலுவைத் தொகை ரூ 30,000/– வரை உள்ள தொகையை மனுதாரர் பெற மறுத்து பொய்யான காரணங்களைக் கூறி ரூ 5,30,000/– நிலுவைத் தொகை இருப்பதாகக் கூறியதன் அடிப்படையில், இருதரப்பினரும் கால்குலேசன் மெமோத் தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி கால்குலேசன் மெமோ மீது எந்தவித இறுதிக்கட்ட வழிகாட்டுதல்களும் பெறாமல் நிலுவையில் இருக்கும் போது அவசர கதியில் தாக்கல் செய்யப்பட்ட இம்மனு சட்டத்திற்கு புறம்பானதும் தள்ளுபடி செய்யத்தக்க வகையில் உள்ளது. எனவே மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடவேண்டும்.

4. இம்மனுவில் தீர்க்கப்படவேண்டிய பிரச்சினை என்னவெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

5. <u>தீர்வு:–</u>

மனுதாரர்தரப்பில் மனுதாரர் எதிர்மனுதாரருக்கு எதிராக இடைகாக வாழ்க்கைப் பொருளுதவி கோரி வ.வி.எண்.39/2018 மனுத் தாக்கல் செய்து மேற்படி மனுவில் எதிர்மனுதாரர் மனுதாருக்கு மாதம் ரூ 15,000/–ஜீவனாம்சமாக மனுத்தாக்கல் தேதியிலிருந்து கொடுக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் மேற்படி உத்தரவின் அடிப்படையில் தொகை எதுவும் செலுத்தாமல் எதிர்மனுதாரர் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக்கிளையில் சி.எம்.பி.(எம்.டி.)எண்.5232/2019 மனுத் தாக்கல் செய்து அம்மனுவில் எதிர்மனுதாரர் மனுதாருக்கு மாதம் ரூ 10,000/– ஜீவனாம்சமாக வழங்க உத்தரவிட்டபின், எதிர்மனுதாரர் அம்மனுவை வலியுறுத்த வில்லை என்று கூறியதன் அடிப்படையில் அம்மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ள தாகவும் எதிர்மனுதாரருக்கு மாதம் ரூ 1,00,000/–மும் சொந்தமாக வீடும் கையில் ரூ 1 கோடி வரை ரொக்கப் பணமும் வைத்து சமூகத்தில் செல்வந்தராக வாழ்ந்து வருவ தாகவும் மனுதாரர் தனது வயதான பெற்றோர் பராமரிப்பில் மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் வாழ்ந்து வருவதாகவும் இ.ம.எண்.39/2018 மனுவில் வழங்கப்பட்ட உத்தரவுப்படி எதிர்மனுதாரர் 22.07.2022 வரை நிலுவைத் தொகையான ரூ 5,30,000/– ஐ செலுத்தவேண்டியுள்ளது என்றும் எதிர்மனுதாரர் மனுதாருக்கு மாத ஜீவனாம்சத் தொகையும் ஜீவனாம்ச பாக்கித் தொகையும் செலுத்தாத நிலையில் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள அசல் மனுவை நிராகரித்து உத்தரவிடவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

6. எதிர்மனுதாரர்தரப்பில் இ.ம.எண்.39/2018 மனுத்தாக்கல் செய்தநாளிலிருந்து தற்போதுவரை ரூ 2,10,000/– செலுத்தவேண்டியதில் எதிர்மனுதாரரால் ரூ 1,80,000/– வரை நீதிமன்ற உத்தரவுப்படி செலுத்தப்பட்டுள்ளதாகவும் பாக்கித் தொகையான ரூ 30,000/–த்தை மனுதாரர் பெற்றுக்கொள்ளாமல் தவறான பொய்யான காரணங்களைக் கூறி ரூ 5,30,000/– நிலுவைத் தொகை இருப்பதாக தெரிவித்து வருவதாகவும் இருதரப்பிலும் ஜீவனாம்சத் தொகை குறித்து கால்குலேசன் மெமோத் தாக்கில் செய்யப்பட்டு எந்தவித இறுதிக்கட்ட வழிகாட்டுதல்களும் பெறாமல் நிலுவையில் இருக்கும்போது அவசர கதியில் இம்மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

7. இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனு ஆவணங்களைப் பரிசீலனை செய்ததில், அசல் மனுவானது எதிர்மனுதாரர்/ மனுதாரரால் மனுதாரர்/எதிர்மனுதாரரிடமிருந்து விவாகரத்துக் கோரி தாக்கல் செய்யப் பட்டுள்ளது. அசல் மனு நிலுவையில் உள்ளபோது மனுதாரர்/எதிர்மனுதாரரால் வாழ்க்கைப் பொருளுதவி கோரி இடைக்கால மனு எண்.39/2018 மனுத்தாக்கல் செய்து, அம்மனுவில் இருதரப்பு விசாரணைக்குப் பின்னர் எதிர்மனுதாரர்/மனுதாரர் மனுதாரர்/எதிர்மனுதாரருக்கு மாதம் ரூ 15,000/- ஜீவனாம்சமாக மனுத்தாக்கல் தேதியிலிருந்து வழங்கவேண்டும் என்றும் மனுத்தாக்கல் தேதியிலிருந்து உத்தரவு தேதி வரையிலான ஜீவனாம்ச நிலுவைத் தொகையை மூன்று தவணைகளில் மூன்று மாதங்களுக்குள் செலுத்தவேண்டும் என்றும் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவினை எதிர்த்து எதிர்மனுதாரர்/மனுதாரர் மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றம் மதுரைக்கிளையில் சி.எம்.பி.(எம்.டி.)எண்.5232/2019 மனுத்தாக்கல் செய்து அம்மனுவில் எதிர்மனுதாரர் ஜீவனாம்ச பாக்கித் தொகைக்காக ரூ 1லட்சத்தை அம்மனு உத்தரவு பெற்ற தேதியிலிருந்து இரண்டு வாரங்களுக்குள் வைப்பீடு செய்ய வேண்டும் என்றும் மேலும் மனுதாரருக்கு மாதம் ரூ 10,000/-ஜீவனாம்சமாக வழங்க வேண்டும் என்றும் ஒரு இடைக்கால உத்தரவிட்டு வழக்கு 04.07.2019 தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. அவ்வாறு உத்தரவிட்டபின், எதிர்மனுதாரர் அம்மனுவை வலியுறுத்தவில்லை என்று கூறியதன் அடிப்படையில் அம்மனு 22.06.2022ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேற்படி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக் கிளையில் சி.எம்.பி.(எம்.டி.)எண்.5232/2019 தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில், இ.ம.எண்.39/2018 மனு தானாகவே உறுதி செய்யப்பட்டுள்ளது. எனவே இ.ம.எண்.39/2018 மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் எதிர்மனுதாரர்/மனுதாரர், மனுதாரர்/ எதிர்மனுதாரருக்கு மாதம் ரூ 15,000/-ம் ஜீவனாம்சத் தொகையும் இ.ம.எண்.39/2018 மனுத்தாக்கல் செய்த தேதியிலிருந்து இ.ம.எண்.39/2018 மனு உத்தரவு வரை செலுத்த வேண்டிய ஜீவனாம்ச பாக்கித் தொகையும் செலுத்தக் கடமைப்பட்டுள்ளதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

8. எதிர்மனுதாரர்/மனுதாரர்தரப்பில் இ.ம.எண்.39/2018 மனுத்தாக்கல் செய்த நாளிலிருந்து தற்போதுவரை ரூ 2,10,000/- செலுத்தவேண்டியதில் எதிர்மனுதாரரால் ரூ

1,80,000/−வரை நீதிமன்ற உத்தரவுப்படி செலுத்தப்பட்டுள்ளதாகவும் பாக்கித் தொகையான ரூ 30,000/−த்தை மனுதாரர் பெற்றுக்கொள்ளாமல் தவறான பொய்யான காரணங்களைக் கூறி ரூ 5,30,000/− நிலுவைத் தொகை இருப்பதாக தெரிவித்து வருவதாகவும் கூறப்பட்டுள்ள நிலையில், இ.ம.எண்.39/2018 மனு உத்தரவின் அடிப்படையில் எதிர்மனுதாரர்/மனுதாரர், மனுதாரர்/எதிர்மனுதாரருக்கு செலுத்த வேண்டிய ஜீவனாம்சத் தொகையைக் கணக்கிட்டுப் பார்க்கும்போது இ.ம.எண்.39/2018 மனுத்தாக்கல் தேதியான 18.06.2018 தேதியிலிருந்து தற்போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்படும் இன்று 06.01.2023 தேதிவரை எதிர்மனுதாரர்/மனுதாரர், மனுதாரர்/ எதிர்மனுதாரருக்கு செலுத்தவேண்டிய ஜீவனாம்சத் தொகையை கணக்கிட்டுப் பார்க்கும்போது, 54 மாதங்களுக்கு ரூ 8,10,000/− எதிர்மனுதாரர்/மனுதாரர், மனுதாரர்/ எதிர்மனுதாரருக்கு ஜீவனாம்சத் தொகை செலுத்த வேண்டியுள்ளது. எதிர்மனுதாரர்/ மனுதாரர் தரப்பில் ரூ 1,80,000/− மனுதாரர்/எதிர்மனுதாரருக்கு செலுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டிருந்தாலும் மனுதாரர்/எதிர்மனுதாரர்தரப்பில் 28.07.2022ம் தேதி தாக்கல் செய்துள்ள கால்குலேசன் மெமோவில் எதிர்மனுதாரர்/மனுதாரர் ரூ.2,80,000/− மனுதாரர்/ எதிர்மனுதாரருக்கு செலுத்தியுள்ளதாகக் கணக்கிட்டு கூறப்பட்டுள்ளது. எனவே இ.ம.எண்.39/2018 மனுத்தாக்கல் தேதியிலிருந்து இன்று 06.01.2023 தேதி வரை செலுத்தவேண்டிய ஜீவனாம்சத் தொகை ரூ 8,10,000/−ல் எதிர்மனுதாரர்/ மனுதாரரிடமிருந்து மனுதாரர்/எதிர்மனுதாரர் ரூ 2,80,000/− பெற்றுக் கொண்டுள்ளதாகக் கூறியுள்ள நிலையில், தற்போது இ.ம.எண்.39/2018 மனுத்தாக்கல் தேதியிலிருந்து இன்று 06.01.2023 தேதிவரை எதிர்மனுதாரர்/மனுதாரர், மனுதாரர்/ எதிர்மனுதாரருக்கு ரூ 5,30,000/− ஜீவனாம்ச பாக்கித் தொகை செலுத்த வேண்டியுள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

9. மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பில் ஜீவனாம்சத் தொகையை எதிர்மனுதாரர்/ மனுதாரர் செலுத்த மறுத்து வருவதாகவும் அதனால் எதிர்மனுதாரர்/மனுதாரர் தாக்கல் அசல் மனுவை நிராகரித்து உத்தரவிடவேண்டும் என்று இம்மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்/மனுதாரர்தரப்பில் ஜீவனாம்ச பாக்கித் தொகை ரூ 30,000/− மட்டுமே உள்ளதாகவும் மேற்படி தொகையை மனுதாரர்/எதிர்மனுதாரர் வசம் செலுத்தத் தயாராக உள்ளதாகவும் முன் வைக்கபப்ட்ட வாதத்தை இந்நீதிமன்றம்

நிராகரிக்கிறது. இ.ம.எண்.39/2018 மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் மேற்படி மனுத் தாக்கல் செய்த தேதியிலிருந்து இன்றைய நாள்வரை (06.01.2023 வரை) கணக்கிட்டுப் பார்த்ததில் மொத்த ஜீவனாம்சத் தொகை ரூ 8,10,000/–த்தில், எதிர்மனுதாரர்/மனுதாரர், மனுதாரர்/எதிர்மனுதாரருக்கு செலுத்தியுள்ள ரூ 2,80,000/–த்தை கழித்ததுபோக மீதி ரூ 5,30,000/–த்தை எதிர்மனுதாரர்/மனுதாரர், மனுதாரர்/எதிர்மனுதாரருக்கு 02.02.2023 தேதிக்குள் செலுத்த வேண்டும் என்றும் அவ்வாறு செலுத்தத் தவறும் பட்சத்தில் இம்மனு தானாகவே அனுமதிக்கப்பட்டு அசல் மனு நிராகரிக்கப்பட்டு விடும் என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

10. முடிவாக, இ.ம.எண்.39/2018 மனுவில் 08.03.2019 ம் தேதி பிறப்பிக்கப்பட்ட உத்தரவுப்படி இ.ம.எண்.39/2018 மனுத் தாக்கல் செய்த தேதியான 18.06.2018 தேதியிலிருந்து இன்றைய தேதியான 06.01.2023 வரை எதிர்மனுதாரர்/மனுதாரர், மனுதாரர்/எதிர்மனுதாரருக்கு செலுத்தவேண்டிய மொத்த ஜீவனாம்சத் தொகை ரூ 8,10,000/–ல், எதிர்மனுதாரர்/மனுதாரர், மனுதாரர்/எதிர்மனுதாரருக்கு செலுத்தியுள்ள ரூ 2,80,000/–த்தை கழித்ததுபோக மீதி ரூ 5,30,000/–த்தை எதிர்மனுதாரர்/மனுதாரர், மனுதாரர்/எதிர்மனுதாரருக்கு 02.02.2023 தேதிக்குள் செலுத்த வேண்டும் என்றும் அவ்வாறு செலுத்தத் தவறும் பட்சத்தில் இம்மனு தானாகவே அனுமதிக்கப்பட்டு அசல் மனு நிராகரிக்கப்பட்டுவிடும் என்றும் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்துத்தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்துப் பார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு, இத்திறந்த நீதிமன்றத்தில் இன்று 06.01.2023 ம் தேதி அவையறியப் பகரப்பட்டது.

V RAMALINGAM Digitally signed by V RAMALINGAM Date: 2023.01.06 18:32:47 +0530

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

<u>மனுதாரர், எதிர்மனுதாரர்தரப்பு சாட்சிகள் , சான்றாவணங்கள்:–</u> இல்லை

V RAMALINGAM Digitally signed by V RAMALINGAM Date: 2023.01.06 18:32:59 +0530

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

சார்பு நீதிமன்றம்,    அருப்புக்கோட்டை
வ.வி.எண்.1/22 இன்
எச்.எம்.ஓ.பி.எண்.173/2017
உத்தரவு நாள் – 06.01.2023